## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
## பதவி வெற்றிடங்கள்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் நிலவும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு II தரம் II/I பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு II தரம் II/I உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, விண்ணப்பதாரிகள் தாமாக தயாரித்துக்கொண்ட சுயவிபரத் தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவம் மற்றும் ஏற்புடைய ஆவணங்களுடன் 2025.03.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சுஹுருபாயா, பத்தரமுல்லை." எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது வருடிஎடுத்து (Scan) admmirecruit@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

2. விண்ணப்பதாரிகள் தற்போது சேவையாற்றும் சேவை நிலையத்திலிருந்து பதில் உத்தியோகத்தர் இன்றி / பின்னர் வழங்கும் அடிப்படையில் விடுவிக்க முடியுமென நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் தனது விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் ஆகக் குறைந்தது அரசாங்க சேவையில் மேலும் 05 வருட சேவைக் காலத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் பதவி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

கட்டுப்பாட்டாளர் நாயகம்
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்